# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.209/2025 | Date | : 05.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : செல்வம் | Calling | : |
| Father Name | : ராஜீ | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.11.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம், பழைய பாளையம், அன்னை நகரில் வசித்து ஜவுளி தொழில் செய்து வருகிறேன். கடந்த 14-03-2025 ம் தேதி, எனது மகன் சொந்த வேலை சம்பந்தமாக வெண்ணந்தூர் செல்வதற்காக Santro காரில் ஓட்டுநர் ஒருவரை வைத்து கொண்டு மதியம் சுமார் 03.00 மணியளவில் கோவை to சேலம் செல்லும் வழியில் உள்ள குப்பனூர் MBL பேக்கரி அருகே சென்றபோது, நாய் குறுக்கே வந்ததால் அவர் சென்ற கார் சென்டர் மீடியனை கடந்து சேலம் to கோவை செல்லும் சாலையில் சென்றுகொண்டிருந்த இன்னோவா காரின்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக, அங்கே இருந்தவர்கள் எனது மகனின் தொலைபேசியை எடுத்து எனக்கு தகவல் சொன்னார்கள். மேலும், அவரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக சொன்னார்கள்.

2) நான் மருத்துவமனை வந்து பார்த்தபோது எனது மகன் இறந்த நிலையில் சவக்கிடங்கில் இருந்தார். காரை ஓட்டிசென்ற நபர் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Selvam

Judicial Magistrate No.1,

Sankari.